# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | இஸ்லாம் - I,II | பாட எண் : 16 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

➢ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைந்தவை,
1. அல்குர்ஆனும் ஸுன்னாவும் 2. அல்குர்ஆனும் இஜ்மாவும்
3. இஜ்மாவும் கியாஸும் 4. கியாஸும் உர்பும்

02. வரஉ என்பது பேணுதலைக் குறிப்பது போல தக்வா என்பது எதனைக் குறிக்கும்,
1. இறையச்சம் 2. பற்றற்ற வாழ்வு 3. பொறுப்புச்சாட்டல் 4. பாவ மன்னிப்பு

03. இமாம் ஷாஃபி (ரஹ்) அவர்களின் சிறப்பு பெயர்,
1. இமாமுல் அஃலம் 2. ஆலிமுல் குறைஷ் 3. இமாமுல் மதீனா 4. ஸைபுல்லாஹ்

04. சுன்னத்தான நோன்பு நோற்பதற்கு பொருத்தமான வார நாட்கள்,
1. ஞாயிறு, திங்கள் 2. திங்கள், வியாழன் 3. வெள்ளி, சனி 4. வியாழன், வெள்ளி

05. “ஒரு முஃமினிடம் இரு பண்புகள் இருக்கவே கூடாது என நபி ஸல் அவர்கள் குறிப்பிட்டார்கள்” அவ்விரு பண்புகளும் யாவை?
1. வட்டியும் சூதும் 2. பொய்யும் நாணயமின்மையும்.
3. பொய்யும் களவும் 4. போதை பொருள் பாவனை, நாணயமின்மையும்

06. பெரிய நீர் தடாகம் ஒன்றில் பாசி படர்ந்ததனால் நீரின் நிறமும் சுவையும் மாற்றமடைந்துள்ளது. இந்நீரில்
1. உளு செய்யலாம்
2. உளு செய்ய முடியாது.
3. உளு செய்யாதிருப்பது நல்லது.
4. உளு செய்து தொழலாம் ஆனால் சுத்தமான நீர் கிடைத்ததன் பின் உளு செய்து மீள தொழ வேண்டும்.

07. இஸ்லாமிய சட்டக் கலை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ள பிரபலமான இமாம்களில் ஒருவர்,
1. இமாம் இப்னு கஸீர் 2. இமாம் கஸ்ஸாலி 3. இமாம் புகாரி 4. இமாம் ஷாபிஈ

08. ஜனாஸா தொழுகையில் மூன்றாம் தக்பீருக்கு பின்னர் ஓத வேண்டியது,
1. சூரத்துல் பாத்திஹா 2. நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறல்
3. ஜனாஸாவுக்காக பிரார்த்தித்தல் 4. சலாம் கூறல்

09. மனைவியை மீட்டுக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் விவாகரத்து முறை,
1. ரஜஈ 2. பாயின் 3. ஈலாஉ 4. ழிஹார்.



kalvi.lk

10. ஸக்காத் விதியாகும் நிபந்தனைகளுள் அடங்காதது,
1. நிஸாபை அடையாதிருத்தல் 2. வருடம் பூர்த்தியாக இருத்தல்.
3. சொத்து வளர்ச்சியடையக் கூடியதாக இருத்தல் 4. பொருள்கள் தனக்குரியதாக இருத்தல்.

11. அல்லாஹ்வின் அல்மு.்.னி என்ற பெயர் அவனின் எந்த பண்பினை குறித்து காட்டுகிறது.
1. செல்வந்தன் 2. தாராளமாக கொடுப்பவன்
3. செல்வந்தனாக ஆக்குபவன் 4. அதிகளவு உதவி செய்பவன்

12. பின்வரும் அரபுச் சொற்களில் இஸ்லாமிய திருமணத்தோடு தொடர்புடைய சொற்களைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
A. மஹர் B. ரிழா C. வலி D. மஹ்ரமி E. தக்ரீரி F. அஸ்ஸுலூக் G. தவக்குள் H. வலீமா
1. ABCD 2. ACDH 3. BDGH 4. CEFH

13. பின்வருவனவற்றுள் எதிர்க் கருத்துக்களைக் காட்டும் சொற்தொகுதி,
1. யவ்முல் கியாமா, யவ்முல் ஆகிரா 2. கல்புன் ஸலீம், கல்புன் முத்மஇன்னா
3. அஹ்லாக் ஹஸனா, மகாரிமுல் அஹ்லாக் 4. ஈமான், குப்ர்

14. இலங்கையில் சேர் செய்யத் அஹமத் கான் என புகழ்ந்துரைக்கப்பட்டவர் யார்?
1. அறிஞர் M.C. சித்திலெப்பை 2. கலாநிதி பதியுதீன் மஹ்மூத்
3. அறிஞர் A.M.A. அசிஸ் 4. கலாநிதி T.B. ஜாயா

15. ஈஜாப், கபூல் என்ற சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு செயற்பாடுகள்,
1. தண்டனைகள், விடுதலைகள் 2. கொடுக்கல் வாங்கல், திருமணம்
3. திருமணம், விவாகரத்து 4. உடன்படிக்கைகள், சாட்சிகள்

16. ஒரு முஸ்லிம் தன்னுடைய வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய மிக முக்கியமான பொறுப்புகளில் 'இமாரத்' என்பது,
1. வணங்கி வழிபடுதல் 2. ஆட்சி அதிகாரங்களை மேற்கொள்ளல்
3. பூமியை வளப்படுத்தல். 4. நிர்வாக கட்டமைப்பு

17. "நீ அல்லாஹ்வின் எதிரி என்பதனால் உன்னை யுத்த களத்தில் கொல்லத் துணிந்தேன். நீ என்னை காறி உமிழ்ந்தபோது எனது எதிரியாக மாறிவிட்டதால் உன்னைக் கொலை செய்தால் அல்லாஹ்விடம் கூலி இல்லாமல் போய்விடும்" எனக்கூறி எதிரியை விட்டு வைத்தவர்,
1. காலித் இப்னு வலீத் (ரலி) 2. உமர் (ரலி) 3. அலி (ரலி) 4. முஆவியா (ரலி)

18. தயம்முமின் உறுப்புக்கள் யாவை?
1. முகமும் இரு கைகளும் 2. முகமும் இரு கால்களும்
3. இரண்டு கால்களும் இரண்டு கைகளும் 4. முகமும் தலையும்

19. ஹனீப்கள் எனப்படுவோர் யாவர்?
1. நபியவர்களைத் துன்புறுத்தியவர்கள்
2. ஜாஹிலிய்யா காலத்தில் இணைவைப்பில் ஈடுபடாதவர்கள்
3. அபிசீனியா ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டவர்கள்
4. நெருப்பு வணக்கத்தில் ஈடுபட்டவர்கள்

20. மனித உள்ளங்களின் வகைகளுள் தன்னையே நொந்து கொள்ளும் உள்ளம் என்பது,
1. நப்ஸுல் லவ்வாமா 2. நப்ஸுல் அம்மாரா
3. நப்ஸுல் முத்மஇன்னா 4. நப்ஸுல் மர்ழிய்யா

21. 201 நாடுகளை கைவசம் வைத்திருக்கும் ஒருவர் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு,
1. ஒரு பெண் ஆடு 2. இரு பெண் ஆடுகள் 3. மூன்று பெண் ஆடுகள் 4. நான்கு பெண் ஆடுகள்

22. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் யமன் பிரதேசத்திற்கு கவர்னராக அனுப்பப்பட்ட சஹாபி,
1. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) 2. முஆத் இப்னு ஜபல் (ரலி)
3. முஆவியா இப்னு அபு சுபியான் (ரலி) 4. ஸ.்.த் இப்னு முஆத் (ரலி)

23. நிரல் "அ" வுக்குப் பொருத்தமானது நிரல் "ஆ" இல் உள்ளது. அதனைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. ஆதம் (அலை) | A. தச்சுத்தொழில் |
| 2. நூஹ் (அலை) | B. இரும்புத் தொழில் |
| 3. இத்ரீஸ் (அலை) | C. அபுல் பஷர் |
| 4. தாவூத் (அலை) | D. நெசவுத்தொழில் |

1. ABCD. 2. CADB. 3. CABD. 4. ACDB



kalvi.lk

24. நபி ஸல் அவர்களின் மனைவிமார்களை எவ்வாறு அழைப்பர்.
    1. அஹ்லுல் பைத்    2. உம்மஹாதுல் மு.ஃ.மினீன்
    3. உமையாக்கள்    4. அப்பாஸியாக்கள்

25. ஒருவரின் மூலதனத்தையும் மற்றொருவரின் உழைப்பையும் கொண்டு மேற்கொள்ளப்படும் வியாபாரம்,
    1. முழாரபா    2. முஷாரகா    3. முஸாரஆ    4. முராபஹா

26. நபி ஸல் அவர்கள் தனது இறுதி ரமலானில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அல்குர்ஆன் முழுவதையும் ஓதி காண்பித்த போது அவருடன் கூட இருந்த சஹாபி,
    1. உஸ்மான் (ரலி)    2. இப்னு அப்பாஸ் (ரலி)
    3.உமர் (ரலி)    4. சைத் இப்னு சாபித் ரல(ரலி)

27. அல்லாஹ்வின் பண்புகளில் குத்ரத் என்பது,
    1. நாட்டம்    2. சக்தி    3. அறிவு    4. பார்வை

28. ஒரு முஜ்தஹித் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் பற்றிய பிழையான கூற்று,
    1. அரபு மொழியில் பாண்டித்தியம்
    2. அல்குர்ஆன், சுன்னா பற்றிய ஆழமான அறிவு
    3. மத்திய காலத்தில் முஸ்லிம்களிடம் வளர்ச்சி அடைந்திருந்த கலைகள் பற்றிய அறிவு
    4. முன்னைய முஜ்தஹிதுகளின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம்

29. ஒருவர் தனது பயன்பாட்டிற்காக மோட்டார் வாகனம் ஒன்றை இஸ்லாமிய வங்கியில் 5 வருட வாடகை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்கிறார். இவ் ஒப்பந்தத்தைக் குறிக்கும் பதம்,
    1. ஸலம்    2. இஜாரா    3. றஹ்ன்    4. வகாலா

30. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களை நூலுருப்படுத்தும் முயற்சி எந்த ஆட்சிக் காலத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.
    1. உமையாக்கள் காலத்தில்    2. அப்பாசியர்களின் காலத்தில்
    3. உஸ்மானியர் காலத்தில்    4. குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில்.

31. அய்யாமுத் தஷ்ரீக் என்பது,
    1. பிறை 12,13,14    2. பிறை 15,16,17
    3. பிறை ரமழான் பிறை 11,12,13    4. துல் ஹஜ் பிறை 11,12,13

32. தஸ்கியதுன் நப்ஸ் என்றால் என்ன?
    1. பற்றற்ற வாழ்வு    2. உளத்தூய்மை    3. இறையச்சம்    4. பேணுதல்

33. ஒருவர் மீது குளிப்பு கடமையாகும் சந்தர்ப்பம்,
    1. ஜனாஸாவை குளிப்பாட்டிய பின்னர்    2. பெருந்தொடக்கு ஏற்பட்டதன் பின்னர்
    3. பிரயாணத்திலிருந்து வீடு திரும்பிய பின்னர்    4. உஷ்ணம் கடுமையாக இருக்கின்றபோது

34. தூய இஸ்லாத்தை பாதுகாக்கும் நோக்கில் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் கடுமையான எதிர்ப்பைப் பெற்ற சிந்தனை பிரிவு,
    1. மு.ஃ.தஸிலா    2. ஷீஆ    3. கவாரிஜ்    4. ஜபரிய்யா

35. மக்னா காட்டா உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு
    1. 1315    2. 1215    3. 1115    4. 1615

36. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஊடக மலையாக கருதப்பட்ட மலை
    1. ஸபா    2. மர்வா    3. ஹிரா    4. தவ்ர்

37. தபீஹுல்லாஹ் என அழைக்கப்பட்ட நபி யார்?
    1. நபி இப்ராஹீம் (அலை) 2. நபி நூஹ் (அலை) 2. நபி மூஸா (அலை)    4. நபி யூசுப் (அலை)

38. அல்குர்ஆனை தொகுக்குமாறு கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்,
    1. உமர் (ரலி)    2. உஸ்மான் (ரலி)    3. அலி (ரலி)    4. ஸைத் இப்னு ஸாபித் (ரலி)

39. கியாஸின் போது தீர்வு காணப்பட வேண்டிய புதிய பிரச்சினை,
    1. அஸ்ல்    2. பர்உ    3. இல்லத்.    4. ஹுகும்

40. ப.ஃ.ஸ், மஹ்ஸர், ஹிஸாப் போன்ற மறுமை வாழ்வுடன் தொடர்புபட்ட விடயங்கள் உள்ளடங்கும் பிரிவானது
    1. அல் இலாஹிய்யாத் 2. அன் நுபுவ்வாத்    3. அஸ் ஸம்இய்யாத்    4. அர் ரூஹானிய்யாத்

(40x1=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

➢ **முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. குப்ரை ஏற்படுத்தும் வழிமுறைகள் இரண்டு தருக.
    2. உமர் (ரலி) அவர்களின் சேவைகள் இரண்டு தருக.
    3. வியாபாரப் பொருட்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக .
    4. ஹஜ், உம்ரா ஆகிய அமல்களில் பேணவேண்டிய பர்லான விடயங்கள் இரண்டை தருக.
    5. ஜாஹிலிய்யாக் கால மக்களிடம் காணப்பட்ட மோசமான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
    6. கலீபா அலி (ரலி) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
    7. அரபு வரலாற்று இப்னு ஷஹ்ரயார் தனது அஜாஇபில் ஹிந்து எனும் நூலில் இலங்கையைப் பற்றி குறிப்பிடும் தகவல்கள் இரண்டு தருக.
    8. இஸ்லாமிய வரலாற்றில் நெறிபிறழ்ந்த சிந்தனை பிரிவினர்கள் தோற்றம் பெற ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டை தருக.
    9. மஸ்ஜிதுன் நபவியின் சிறப்புக்கள் இரண்டு தருக.
    10. இஜ்மாவின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(2×10=20 புள்ளிகள்)

02. 1. மு.ஃ.ஜிஸதுல் குர்ஆன் என்றால் என்ன?
    2. அல்குர்ஆன் இஸ்லாமிய சட்டத்தின் பிரதான மூலாதாரம் என்பதற்கான நியாயங்களில் மூன்றைக் குறிப்பிடுக.
    3. அல்குர்ஆனைப் பாதுகாப்பதில் கலீபா உஸ்மான் (ரலி) அவர்களின் பங்களிப்புக்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்))

03. 1. இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் இரண்டை குறிப்பிடுக.
    2. இளமைப் பருவத்தினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு இஸ்லாம் குறிப்பிடும் வழிகாட்டல்களுள் மூன்றைத் தருக.
    3. வாழ்வில் நடுநிலை பேணல் (வஸதிய்யா) தொடர்பாக இஸ்லாம் முன்வைத்துள்ள ஐந்து வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. 1. இஸ்லாம் தடை செய்துள்ள வர்த்தக முறைகள் இரண்டைத் தருக.
    2. முஷாரகா வர்த்தக முறை பற்றி சுருக்கமாக குறிப்பிடுக.
    3. பொருளீட்டலின்போது கடைபிடிக்க வேண்டிய ஷரிஅத் வரையறைகள் ஐந்தை விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. 1. அதப், ஹுலுக் ஆகியவற்றின் பன்மைச் சொற்களைத் தருக.
    2. சூரா லுக்மானில் குறிப்பிடும் மூன்று ஒழுக்க பண்புகளைக் குறிப்பிடுக.
    3. அபூபக்கர் (ரலி) தனது கிலாபத்தின் போது மேற்கொண்ட ஐந்து பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. 1. உம்மத் என்பதன் கருத்தை எழுதுக.
    2. குடும்ப உறவின் மூலம் உருவாகும் மஹ்ரமிகள் மூன்று பேரைத் தருக.
    3. அஜ்னபிகளுடன் கலந்துரையாடும்போது பேண வேண்டிய ஒழுங்கு முறைகள் 5 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் இரண்டிற்குச் சிறு குறிப்பு எழுதுக.
    1. இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு.
    2. தொடர்பூடகங்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்.
    3. இறுதி நபித்துவம்.
    4. நீரின் வகைகள்.

(5+5=10 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page